# பயிலரங்கம்

புதுச்சேரி, பிப். 13-

புதுப்பிக்கவல்ல எரி சக்தி முகமை, டில்லி எரி சக்தி திறன் குழுமம், எரி சக்தி திறன் பணி கழகம் இணைந்து, மத்திய மின் அமைச்சகத்தின் எரி சக்தி திட்டமான 'பஜட் லேம்ப் யோஜனா' திட்டத்தை புதுச்சேரியில் நடைமுறைப்படுத்துவற்கான பயிலரங்கம் நடந்தது.

ஓட்டல் ஆனந்தா இன்னில் நடந்த நிகழ்ச்சியில், இணைச் செயலர் பங்கஜ் குமார் ஜா வரவேற்றார். அமைச்சர் தியாகராஜன் துவக்கி வைத்தார். தலைமைச் செயலர் சத்தியவதி, மின் துறை செயலர் மீனா, கண்காணிப்பு பொறியாளர் மதிவாணன் உள்ளிட்ட அனைத்து உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இப்பயிலரங்கில், திட்ட செயல்பாடுகள் குறித்து படக் காட்சிகள் மூலம் விளக்கப்பட்டது. இத்திட்டத்தினை மின் திறன் குழுமம் மற்றும் மின் துறை செயல்படுத்துகின்றன. ஏற்பாடுகளை புதுப்பிக்கவல்ல எரிசக்தி முகமை அதிகாரிகள் செய்திருந்தனர்.




புதுச்சேரி புதுப்பிக்கவல்ல எரிசக்தி முகமை சார்பில் ஓட்டல் ஆனந்தா இன்னில் நடந்த பயிலரங்கில் அமைச்சர் தியாகராஜன் பேசினார். அருகில் தலைமைச் செயலர் சத்தியவதி, மின்துறை கண்காணிப்பு பொறியாளர் மதிவாணன், இணைச் செயலர் பங்கஜ் குமார் ஜா.